# ஆழ்வார்கள் பாடல்களில் திருமாலின் வர்ணனை

*இரா. சீதா லட்சுமி*

## முன்னுரை

**நெ**ஞ்சைப் பண்படுத்தும் பண்டைக் காதற் பாடுபொருளும், நினைவை ஊக்குவிக்கும் வீரப் பாடு பொருளும் பின்னர்ப் பக்திப் பாடல்களாக வளர்ந்து மேலோங்கியிருந்த காலம், கி. பி. ஆறாம் நூற்றாண்டு முதல் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை நீட்டித்த பக்தி இலக்கியக் காலமாகும். இவ்வாறு தோன்றிய பக்திப் பாடல்கள் பெரும்பாலும் சிவபெருமானையும், திருமாலையும் அவர்தம் செயற்கருஞ் செயல்களையும், சீரிய குணங்களையும் பாடுபொருளாகக் கொண்டமைந்தனவாகும்.

தொடக்கக் காலத்தில் சிவபெருமானைப் பற்றி எழுந்த பாடல்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய சைவசமயச் சான்றோர் மூவர் பாடியனவாகும். இவை தேவாரம் என்று சிறப்பிக்கப் பெற்றன. இவ்வாறே திருமாலைப் பற்றி எழுந்த பாடல்களைப் பன்னிரு ஆழ்வார்கள் பாடியருளினர். இவை பாசுரங்கள் என்று போற்றப் பெறுகின்றன. ஆழ்வார்கள் பாடியருளிய பாசுரங்கள் சிறப்பாகத் தமிழகத்திலும், பொதுவாக இந்தியாவிலும் வைணவத் தத்துவத்தையும், திருமால் பக்தியையும் பாதுகாத்து வளர்ப்பனவாக விளங்குகின்றன.

திருமாலின் திருக்குணங்களில் ஈடுபாடு கொண்டவர்கள், அவன் பக்திக் கடலிலே அழுந்திக் கிடப்பவர்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர். ஆழ்வார்கள் திருமாலின் உறுப்புகளாகக் கருதப்படுவர். வைணவத் தத்துவப்படி திருமாலே தலைவனும் காப்பவனும் எல்லாவற்றுக்கும் காரண முதல்வனும் ஆவார். உயிர்க்குரிய உடல் முதலான பொருள்கள் அனைத்தும் தலைவனாகிய திருமாலுக்கே உரியன. ஆனால், 'நான்', 'எனது' என்னும் உணர்வால் மனிதன், 'தான் திருமாலுக்கு அடிமை' என்பதை மறந்து

விடுகிறான். அதனால் திருமாலுக்குப் பணி செய்வதாகிய பேரின்பத்தையும் இழந்து விடுகின்றான். இவ்வாறு தன்னை மறந்து, தலைவனையும் மறந்து, தனக்கேயுரிய பேரின்பத்தையும் இழந்து நெறியல்லா நெறியிலே சென்று உழல்கின்ற சீவர்களாகிய மனிதர்களைத் துன்பக் கடலிலிருந்து கரையேற்றுவதற்காகத் திருமால் தாமே பல பிறப்புகளை எடுத்தார். அவற்றினாலும் அனைத்து உயிர்களையும் கரையேற்ற இயலவில்லை. அதனால், மானைக் காட்டி மானைப் பிடிப்பவர்கள் போல, மனிதர்களைக் காட்டி மனிதர்களைத் தடுத்தாட் கொள்ள அவர் பேரருள் கொண்டார். அதன் பயனாகத் தம் உறுப்புகளாகிய சங்கு, சக்கரம் முதலியவற்றை மண்ணுலகில் தோற்றுவித்தார். அத்தோற்றங்களே ஆழ்வார்கள். திருமாலின் நற்குண, நற்செயல்கைகளை எல்லாம் அவர்கள் துய்த்து அவ்வாறு தாம் துய்த்த இன்பத்தை உலகெலாம் பெறுமாறு செய்தனர்.

ஆழ்வார்கள் பல சாதியினர்; பல குலத்தவர்; பல மொழியினர்; பல்வேறு காலத்தவர்; பல்வகையான வாழ்க்கையினர்; ஆனால் ஒரே குறிக்கோளினர். ஆழ்வார்கள் பன்னிருவராவர். எனினும், பதின்மர் என்னும் கருத்தும் உள்ளது. தென்குருகூர் நம்பிக்கு அன்பனாய், அடியனாய் அமைந்து, அவரையே பாடிய மதுரகவியையும், புதுவையர் கோன் வீட்டு சித்தன் மகளாராகிய ஆண்டாளையும் வித்து மற்றையோரை ஆழ்வார் பதின்மர் என்று கூறும் மரபும் உள்ளது.

காலக் கண் கொண்டு கருதி ஆழ்வார்களைப் பின்வரும் வரிசையில் தொகுத்தும் வகுத்தும் கூறுவர். அவர்கள் முதலாழ்வார் மூவர், திருமழிசையாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், குலசேகர ஆழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கை ஆழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், மதுரகவி ஆகியோராவர்.

## திருமாலை ஆழ்வார்கள் வர்ணித்துப் பாடும் பாங்கு

வைணவ நெறியின் முழுமுதற் கடவுளான திருமாலை அலங்காரப் பிரியராகவும், கிடந்த கோலத்திலும், அவதாரச் சிறப்பாகவும் ஆழ்வார்கள் வர்ணித்துப் பாடியிருக்கும் பாங்கு கற்போர் மனதைப் பக்தி பரவசமடையச் செய்கின்றது. இந்த வர்ணனைகளை நாம் முறையே, தசாவதார வர்ணனை; திருதசாங்க முறை வர்ணனை; உள்ளுரை உவமம் வழி வர்ணனை ஆகிய நிலைகளில் பகுத்துணரலாம்.

### தசாவதாரம்

வைணவ நெறியில் திருமாலின் அவதாரக் கொள்கை சிறப்பிடம் பெறுகின்றது. உலகத்தில் நல்லோர்களைக் காக்கவும் தீயோர்களை அழிக்கவும் அறத்தினை நிலைநாட்டவும் திருமால் அவ்வப்பொழுது உலகில் தோன்றுவார் என்பது

வைணவர்களின் நம்பிக்கை. இத்தகு கருத்தினைக் கண்ணன் பகவத்கீதையில்,

*எப்பொழுதெல்லாம் உலகில் அநீதி தலைதூக்குகிறதோ*
*அப்பொழுதெல்லாம் துஷ்டர்களை அழிப்பதற்கும் நல்லோரைக்*
*காப்பதற்கும் நான் யுகந்தோறும் அவதாரம் செய்கிறேன்*

என்று உபதேசிப்பது கருத்திற்கொள்ளத் தக்கதாகும்.

அவதாரம் என்ற சொல்லிற்கு மேலிருந்து கீழே இறங்கி வருதல் என்பது பொருளாகும். பரம்பொருளான திருமால் உயிர்களிடத்தில் கொண்ட கருணையின் காரணமாக மண்ணுலகில் பிறக்கிறான். ஆற்றல், வளம், அதிகாரம் உடையனவெல்லாம் திருமாலின் சக்தியில் ஒரு கூறிலிருந்து உதித்தவை என்று கருதப்பெறுகிறது. திருமாலின் எண்ணற்ற அவதாரங்களில் மிகவும் சிறப்புக்குரியவை பத்து அவதாரங்கள். அவையாவன : ***(1) மச்சம் (2) ஆமை (3) வராகம் (4) நரசிம்மம் (5) வாமனன் (6) பரசுராமன் (7) இராமன் (8) கண்ணன் (9) பலராமன் (10) கல்கி*** ஆகியனவாகும்.

திருமாலின் 10 அவதாரங்களும் பரிணாமத்தின் முக்கியப் படிகளை உணர்த்துகின்றன எனவும் கூறுவர். மனித இயற்கையிலும் தாழ்ந்த விலங்குத் தன்மை, மீன், ஆமை, பன்றி என்னும் அவதாரங்களிலே குறிப்பிடப்படுகின்றது. பிறகு, விலங்குகளிலிருந்து மனித நிலைக்கு மாறுவதை நரசிம்ம அவதாரம் காண்பிக்கிறது. வாமன அவதாரம் மனித இயற்கை முழு வளர்ச்சியடையாமையைக் காட்டுகிறது. மனிதனது முதல் நிலை, கொடிய விலங்குத் தன்மையான பழி வாங்கும் நாகரிகமற்ற நிலை என்பதைப் பரசுராம அவதாரம் தெரிவிக்கிறது. இச்சையொன்றும் கொள்ளாமல் உலகிலுள்ள தீய சக்தியுடன் போராடி வெற்றி பெறுவதைக் கிருஷ்ண அவதாரம் குறிக்கிறது. எல்லா உயிர்களிடமும் இரக்கம் வேண்டுமென்பதைப் புத்த அவதாரம் வெளியிடுகிறது. தீமையையும் ஒழுகின்மையையும் வெட்டி வீழ்த்துவதை வாளோடு தோன்றும் கல்கியவதாரம் தெரிவிக்கிறது.

மேற்படி 10 அவதாரங்களில் குறிப்பாக, கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், இராமன், கண்ணன் ஆகிய 6 அவதாரங்களில் ஆழ்வார்கள் திருமாலை வர்ணித்துப் பாடியிருக்கும் பாங்கைச் சற்று ஆழ்ந்து நோக்குவோம்.

**கூர்மாவதாரம்**

திருமால் கூர்மாவதாரம் எடுப்பதற்கு அடிப்படைக் காரணம் இந்திரனை நோக்கித் துர்வாச முனிவர் இட்ட சாபமாகும். இம்முனிவர் சிறந்த சிவ பக்தர். இவர் இந்திரனுக்கு

ஒரு முறை கற்பக மலர்மாலை ஒன்றினை அன்பளிப்பாகத் தந்தார். அதனை அலட்சியமாக வாங்கிய இந்திரன் தன் ஊர்தியாகிய ஐராவதம் என்னும் யானையின் மேல் வைத்தான். அவ்வானை அம்மாலையைத் தரையில் போட்டு மிதித்து விட்டது. தான் வழங்கிய பொருள் மிதிபடுவதைக் கண்ட துர்வாச முனிவர், இந்திரனும் மற்ற தேவர்களும் ஆற்றல் நலியும்படி சபித்தார். தேவர்கள் வலி குன்றிய நிலை கண்டு அசுரர்கள் போர் தொடுத்தனர். எவ்வளவோ முயன்றும் தேவர்களால் அசுரர்களை அழிக்க முடியவில்லை. முடிவாக, திருமாலிடம் முறையிட்டனர். அவர்களுக்கு அருளும் நோக்கில் திருமால் அரிய ஆலோசனை வழங்கினார். அதன்படி மருந்து மூலிகையையெல்லாம் பாற்கடலில் போட்டு மந்தார மலையை மத்தாக நட்டுக் கடையும்படி தேவர்களுக்கு அறிவுரை கூறினார். தேவர்களால் அம்மலையைப் பெயர்க்க முடியவில்லை. பாற்கடலைக் கடைவதால் கிடைக்கும் அமிழ்தத்தில் சரி பாதியைத் தருவதாக அசுரர்களுக்கு வாக்களித்து அவர்களையும் துணைகொண்டு அம்மலையைப் பெயர்க்கும்படி வழி கூறினார். அவ்வாறே மந்தார மலையைப் பெயர்த்துப் பாற்கடலில் நட்டு, வாசுகி எனும் பாம்பினைக் கடையும் கயிறாகக் கைக்கொண்டு பாற்கடலைக் கடைந்தனர். கடையும் பொழுது கடலின் அடிப்பாகத்திலுள்ள சேற்றில் மலை அமுந்தியது. அப்போது அதற்கு ஆதாரம் கொடுக்கும் பொருட்டுத் திருமால் ஆமையாக அவதாரம் எடுத்துக் கடலுக்கடியில் சென்று தன் முதுகின் மேல் அம்மலையைத் தாங்கினார். பின்னர் இரு திறத்தினரும் அம்மலையை இயக்கிப் பாற்கடலைக் கடைந்தனர். முடிவாகத் திருமால் தேவர்களுக்கு மட்டும் அமிழ்தத்தை வழங்கி மறைந்து விட்டார். முடிவாக அமிழ்தத்தைப் பருகியதால் தேவர்கள் அழியா வரமும் ஆற்றலும் பெற்றனர். இந்திரன் அசுரர்களை வென்று தேவர் கோனாகத் திகழ்ந்தான். இவ்வாறு கூர்மாவதாரம் குறித்துப் புராணச் செய்தி வழங்குகிறது.

இவ்வாறு தேவர்களுக்குச் சாவா மருந்து எடுத்துத் தந்து ஆட்கொண்ட திருமாலின் அருளிச் செயலை, *'கடைந்த அன்று அருவரைக்கு ஓர் ஆமையாய் ......'* என்று திருமழிசையாழ்வாரும், *'வரைநட்டு ...... அமுதம் எய்தும் அளவு ஓர் ஆமையாய்'* எனத் திருமங்கையாழ்வாரும் பாடி பரவசமடைகின்றனர்.

மேற்கண்டவாறு திருமால் எடுத்த கூர்மாவதாரத்தை ஆழ்வார்கள் பல்வேறு சிறப்புகளுடன் பாடியுள்ளனர். இதன் வழி இறைவன் நல்லோருக்கு எக்காலத்தும் நல்லருள் புரிவான் என்ற கருத்து விளங்குகிறது.

**வராக அவதாரம்**

திருமால் வராக அவதாரம் எடுத்ததற்குரிய தாத்பரியத்தை விளக்க மூன்று வகையான கதைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் சிறப்பாகப் பின்வருமாறு

கூறப்படுகின்றது. ஒரு சமயம் இரணியகசிபுவின் உடன் பிறந்தவனான இரண்யாசனென்னும் கொடிய அசுரன் தன் வலிமையால் பூமியைப் பாயாகச் சுருட்டி எடுத்துக் கொண்டு கடலில் மூழ்கச் சென்றபொழுது தேவர், முனிவர் முதலானோர் வேண்டுகோளினால் திருமால் வராக அவதாரம் எடுத்து கடலினுள் புகுந்து அவ்வசுரனைக் கொன்று பூமியை மேலே கொண்டு வந்து பழையபடி விரித்தருளினான்.

இவ்வாறு திருமால் நிகழ்த்திய அருளிச் செயலை, *'கேழலுமாய் ..... தரணியை ..... இடந்தானை'* **(பெரி. 4.8.8.)**, *'கேழலாய் உலகை இடந்த .....'* **(மங். 6.10.1)** எனப் பலவாறு ஏனையப் பாடல்களிலும் ஆழ்வார்கள் வர்ணித்துப் பாடியிருக்கும் பாங்கு சிறப்புறுகின்றது. மேற்படி, திருமால் அவதாரம் எடுத்த தத்துவத்தை நோக்கும்போது, இறைவன் தன்னை அண்டி வேண்டி வருந்தும் அடியவர்களின் இடரினைத் தீர்ப்பான் என்ற உண்மை புலப்படுகின்றது.

## நரசிம்ம அவதாரம்

ஆழ்வார் பாடல்களில் இடம்பெறும் மற்றுமோர் அவதாரம் நரசிம்ம அவதாரமாகும். இரணியாட்சகனின் இளவலாக இரணியன் பிறந்தான். இறைவனிடம் பெருந்தவம் கொண்டு விண்ணிலோ, மண்ணிலோ, வீட்டிலோ, வெளியிலோ, பகலிலோ, இரவிலோ, மனிதனாலோ, மிருகத்தாலோ அல்லது ஆயுதத்தாலோ தமக்கு மரணம் விளையக் கூடாது என்று இரணியன் வரம் பெற்றான். நாராயணனை வழிபடும் பக்தர்கள் 'ஓம் நமோ நாராயணாய நமஹ' என்று சொல்வதை விடுத்து 'ஓம் நமோ இரணியனாய நமஹ' என்று கூறும்படி கட்டளையிடுகின்றான்.

பக்தர்கள் இறைவனிடம் முறையிட, இரணியனுடைய மனைவி கருவுற்று பிரகலாதன் பிறக்கிறான். அவன் தன் தந்தையின் நாமத்தைக் கூறாமல் திருமாலின் நாமத்தையே கூறுகின்றான். சினமுற்ற இரணியன், இறைவனைக் காட்டும்படி கேட்க, 'இறைவன் தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான்' எனப் பிரகலாதன் பதில் கூறுகிறான். இரணியன் தூணை உடைக்க, அதிலிருந்து நரசிங்கன் வெளியே வருகிறான். இச்சம்பவம் பகலுக்கும் இரவுக்கும் இடைப்பட்ட காலமான சாயுங்காலத்தில் நடைபெறுகிறது. மனித மிருகமாகத் தோற்றமளிக்கும் நரசிங்கன், ஐந்தடியில் தமது மடியில் இரணியனை வைத்து, தன் நகத்தால் அவனை இரண்டு கூறாகக் கிழிக்கிறான்.

இச்சம்பவத்தை, *'தூணாய் அதனூடு அரியாய் வந்து தோன்றி'* **(மங். 1.10.5)**, *'அரிஉருவமாகி இரணியனது ஆகம்...... உகிரால் கீண்டான்'* **(பேய். மூன். 42)** என இப்படியாக ஆழ்வார்கள் பலவாறு பாடி உவகையடைகின்றனர்.

மேற்கண்டவாறு திருமால் நரசிம்ம அவதாரம் எடுத்த தன்மையை நோக்கும்போது,

ஆழ்ந்த பக்தி அகங்காரத்தை வென்று விடும் எனும் தத்துவம் பொதிந்து கிடக்கின்றது. இதனை, பிரகலாதனின் பக்தி, இரணியனின் அகங்காரத்தை வென்று விடுவதிலிருந்து கண்கூடாகக் காண முடிகின்றது.

**வாமன அவதாரம்**

மாவலி, பிரகலாதனின் பேரனும் விரோட்சனின் மைந்தனும் ஆவான். தியாகத்தாலும் ஆற்றலாலும் வலியவனான மாவலி, மூவுலகங்களையும் ஒரு குடையின் கீழ் ஆண்டான். இந்திரன் தாய் அதிதி திருமாலிடம் முறையிட்டு மாவலியைக் கொன்று மீண்டும் வானுலகின் ஆட்சியை இந்திரனிடம் வழங்கும்படி வேண்டினார். அவ்வாறே இசைந்த திருமால் காசிபருக்கும் அதிதிக்கும் குறளனாகப் பிறந்தார். இளமைக் காலத்தில் மாவலி நடத்திய யாக சாலைக்கு இரந்து சென்றார். மாவலியின் அமைச்சர் வெள்ளி குறளனாக வந்தவர் திருமால் என்றும் அவனிடம் விழிப்புடன் நடக்க வேண்டுமென்றும் அறிவுரை கூறினார். ஆயினும் 'கொடுப்பதே மேல்' என்ற கொள்கையுடைய மாவலி வேள்விக்கு உரியவனாகிய திருமாலே ஒன்றை வேண்டும் பொழுது அதனை வழங்க வேண்டுமென்று எண்ணினான். வாமனன் வேண்டிய வண்ணம் மூன்றடி மண்ணினை நீர்வார்த்துக் கொடுத்தான். அதனைப் பெற்றவுடன் திரிவிக்கிரமனாக விசுவரூபம் எடுத்து இரண்டடியால் மண்ணையும் விண்ணையும் அளந்து மூன்றாவது அடியினை மாவலியின் தலையில் வைத்துப் பாதாள உலகத்தில் அழுத்தி அசுரர்களிடமிருந்து மூன்றுலகங்களையும் காப்பாற்றி அருளினார் திருமால்.

வாமனனாக வந்த திருமால் திரிவிக்கிரமனாக உயர்ந்த நிலையையும் தனி அவதாரமாக எண்ணப் பெறுதல் உண்டு. திருமாலுக்கும் கதிரவனுக்கும் தொடர்புண்டு. மூன்றடி என்பது கதிரவனின் உதயம், உச்சி, சாய்வு என்று மூன்றையும் குறிக்கும் என்பர். மேலும் நிலவுலகில் நெருப்பாகவும், விண்ணில் மின்னலாகவும், விண்ணின் மேல் கதிரவனாகவும், திருமால் திகழ்தலை இம்மூன்றடி குறிப்பாகச் சுட்டுகிறது என்பர்.

மேற்படி திருமாலின் வாமன அவதாரம் குறித்துச் சுட்ட வந்தவிடத்து, ***'மூவடி மாவலியை வேண்டிதான் அமர எழுஉலகும் அளந்து' (மங். 7.8.6)***, ***'நீரேற்று மூவடியால் சென்று திசை அளந்த' (பொய். முதல் 21)*** என்று இன்னும் பலவாகப் போற்றிப் பாடுகின்றனர் ஆழ்வார்கள்.

**இராமாவதாரம்**

இலங்கையில் அரசனாக விளங்கிய இராவணனின் கொடுமையைத் தாங்கவொன்னாத தேவர்களையும், மக்களையும் காக்கும் நோக்கில் திருமால் இராமனாக அவதரித்தார். அயோத்தியின் அரசனாகிய தசரதனுக்கும் கோசலைக்கும் தெய்வப் பொலிவுடைய

இராமன் தோன்றினார். அதே நிலையில் திருமகள், மிதிலையின் மன்னனாகிய சனகனின் வளர்ப்பு மகளாக, சீதை என்ற பெயருடன் வளர்ந்து வந்தாள். விசுவாமித்திரரின் முயற்சியால் இருவருக்கும் திருமணம் நடந்தது. குசத்துவ முனிவரின் மகள் வேதவியை இராவணன் அடைய விரும்பினான். அவள் திருமாலைத் தவிர யாரையும் மணப்பதில்லை என்று உறுதியுடன் இருந்தாள். அவள் விருப்பத்திற்கு மாறாக அவள் கூந்தலைத் தொட்டான். தன் கூந்தலைக் களைந்து தீக்குளிக்கும் பொழுது இராவணனை நோக்கி ஒரு பெண்ணினால் இறப்பாய் என்று சபித்தாள். அவளே சீதையாகப் பிறந்தாள் என்றும் புராணம் கூறுகிறது.

தேவர்களே வானரங்களாக அவதாரம் செய்தனர். இராமன் வானரப் படையுடன் இலங்கைச் சென்று இராவணன் உள்ளிட்ட தீய அரக்கர்களை அழித்து அறத்தை நிலை நாட்டிப் பிராட்டியை மீட்டு அயோத்தியை ஆட்சி புரிந்தான். இராம அவதாரம் வால்மிகி முனிவரின் உள்ளத்தைக் கவர்ந்தது. அதன் விளைவே இராமாயணம் என்ற இதிகாசமாகும். இராமன் திருமாலின் அவதாரம் என்ற கருத்து சிலப்பதிகாரத்தில் சுட்டப் பெற்றுள்ளது. கம்பன் காவியம் பாடுவதற்கு ஆழ்வார்களும் வழிகாட்டி எனலாம்.

இராமன் காட்டில் இருக்கும் பொழுது ஒரு மானைக் காண்கிறான். அம்மானைக் கொண்டு வரும்படி சீதை கேட்கிறாள். சீதையின் வேண்டுகோளை நிறைவேற்ற, இராமன் அம்மாய மானை விரட்டிச் செல்கிறான். அத்தருணத்தில் இராவணன் சீதையைக் கடத்திச் செல்கிறான். ஏற்கெனவே இராவணன் தனது பத்துத் தலைகளை மறைத்து நான்முகனிடம் வரம் பெற்று விடுகிறான். ஆனால் இராமனே பலம் பொருந்திய அவனைக் கொன்று சீதையை மீட்க மலைகளைக் கொண்டு கடலில் அணை கட்டுகிறான்.; இறுதியில் இராவணனைக் கொன்று சீதையை மீட்கிறான்.

இப்படியாக இராமாவதாரத்தில் ஒரு காட்சியில் இராமன் விஸ்வாமித்திரருடன் சென்று வேள்வி காக்க கன்னி வேட்டையாகத் தாடகையை வதைத்ததை, *'திண்திறலாள் தாடகை தன்உரம் உருவச்சிலை வளைத்தாய்'* (குல. 8.2.), *'சுடுசரம் அடுசிலைத் துரந்து நீர்மையிலாத தாடகை மாள நினைந்தவர்'* (மங். 9.8.4) எனப் பாடுகின்றனர்.

இன்னும் இது போலவே, இராமன் பரசுராம வலி அடக்குதல், கானகம் செல்லுதல், குகனுடன் தோழமைக் கொள்ளுதல், விராதனைக் கொல்லுதல், சூர்ப்பனகையின் அங்கங்களை அறுத்தல், இராவணன் சீதையைக் கவர்ந்து சிறை வைத்தல், இராமன் வாலியைக் கொன்று சுக்ரீவனை அரசனாக்குதல், இலங்கையை அநுமன் எரி ஊட்டுதல், இராமன் இலங்கை மீது படை எடுத்து அழித்தல், இராமன் அனுமன் சீதை ஆகியோரது இயல்பு முதலான பல்வேறு செய்திகளை ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்களில் போற்றிப் பாடியிருக்கும் பாங்கு கற்போர் மனதை நெகிழ வைக்கின்றது.

இங்ஙனம் திருமாலின் இராமாவதாரம் அல்லோரை அழித்து நல்லோரை வாழ வைக்கும் இறைவனின் அருட்குணத்தைக் காட்டுகிறது.

**கண்ணன் அவதாரம்**

துவாபர யுகத்தில் திருமாலின் எட்டாவது அவதாரமாகக் கண்ணன் தோன்றினான். இராமபிரான் ஒரு பொழுது கானகம் சென்று அசுர சக்திகளிடமிருந்து முனிவர்களைக் காப்பாற்றினார். அப்பொழுது முனிவர்கள் மட்டுமின்றிப் பறவைகள், விலங்குகள், செடிகொடிகள் முதல் அவன் பேரழகில் மயங்கி நின்றன. அரக்கர்கள் கூட அயர்ச்சி அடைந்தனர். அப்பொழுது இராமபிரான் தன் அவதாரக் காலத்தில் கொண்டிருக்கும் ஏகபத்தினி விரதத்தை எடுத்துரைத்து அடுத்த ஊழியில் தான் கண்ணனாக அவதாரம் எடுப்பதாகவும் தன்பால் காதல் கொண்ட உயிரினங்கள் அனைத்தையும் அப்போது இடைப்பெண்களாகப் பிறக்கும்படியும் அவர்களின் ஆசையை நிறைவு செய்வதாகவும் உறுதியளித்தார். அவ்வாறே வாசுதேவர், தேவகி ஆகிய பெற்றோர்க்கு எட்டாவது பிள்ளையாக கண்ணன் பிறந்தான்.

ஆழ்வார்கள் கண்ணனைப் பற்றிய அவதாரச் செய்திகளையெல்லாம் அற்புதமாக வர்ணித்துப் பாடியுள்ளனர். ஒரு சமயம் கண்ணபிரானைக் கொல்லுமாறு கம்சனால் ஏவப்பட்ட 'பூதனை' எனும் பேய்ச்சியை முலைப்பாலோடு அவளுயிரையும் உறிஞ்சி உண்ட சம்பவத்தை, *'வஞ்ச பேய்மகள் துஞ்ச வாய்முலை வைத்தபிரானே'* (பெரி. 2.4.4), *'பேய்முலைநஞ்சு ஊணாக உண்மான்'* (பொய். முதல் 11), *'மாயவள் நஞ்சு ஊண்பாவித்து உண்டானது'* (நம். பெரி. 52) என்றும் பாடுகின்றனர். இச்சம்பவம், வஞ்சனைச் செயலை வஞ்சனைச் செயலாலேயே வெற்றிக் கொள்ளும் தத்துவத்தை உள்ளடக்கியுள்ளது.

இன்னும் கண்ணன் வெண்ணெய் திருடி ஆய்ச்சியிடம் பிடிப்பட்டுக் கட்டுண்ணும் நிகழ்வை, *'துப்பமும் பாலும் தயிரும் விழுங்கிய அப்பன்'*(பெரி. 2.1.6.), *'கோவலனாய் வெண்ணெய் உண்ட வாயன்'* (திருப். அதல. 10) எனப் பலவாறு பாடி பரவசமடைகின்றனர். இந்நிகழ்வு வழி, இறைவன் தன்பால் மெய்யன்பு கொண்ட அடியவர்களிடம் எளிமைக் கோலம் கொண்டு வந்திரங்கி அருள் செய்வான் எனும் தத்துவம் புதைந்து கிடக்கின்றது.

இவ்வாறு கண்ணன் குறும்புகள், கண்ணன் கன்று மேய்த்தல், காளியனைப் பிடித்தல், அரிஷ்டாசுரனைக் கொல்லுதல், ஆயர் மகளிர் ஆடைகளைக் கவர்தல், கம்சனை வஞ்சித்தல், பாண்டவர்களுக்கு அருளுதல் முதலான பல்வேறு அம்சங்கள் குறித்து ஆழ்வார்கள் வர்ணித்துப் பாடியிருக்கும் பாங்கு கற்றுணரத்தக்கது.

### திருதசாங்க முறை

திருமாலின் திருவுருவம், உடல் உறுப்பு, ஆடை அணிகலன், படைக்கலன்கள், கிடந்த கோலம் முதலியன குறித்துச் சுட்டுவதே திருதசாங்க முறையாகும்.

### திருவுருவச் சிறப்பு

சொரூப நிலையிலுள்ள இறைவன் உயிர்களிடத்தில் கொண்ட கருணை காரணமாக அவ்வுயிர்களைக் கடைத்தேற்றும் பொருட்டுப் பல்வேறு திருவுருவச் சிறப்பைக் கொள்கிறான். எல்லாப் பொருட்களையும் படைத்த இறைவன் அவற்றினுள் ஊடுருவி நிற்பதன் காரணமாக அப்பொருள்கள் அனைத்தும் அவனே ஆவான் என்று ஆழ்வார்கள் கண்டனர். இவ்வுண்மையினை உணர்த்தும் பொருட்டே, *'கருகார்க் கடல் வண்ணன்'* ***(பெரி. 1.7.6.), 'நீர் புரை வண்ணன்' (நம். 1.8.11), 'கார் ஒளி வண்ணனே' (தொண். திரு. 29), 'கார் முகில் வண்ணன்' (மங். 10.9.3), 'மிக்கிலங்கு முகில் நிறத்தாய்' (குல. 5.8)*** என்று இன்னும் ஏனையப் பாடல்களிலும் திருமாலின் திருவுருவத்தைக் கடலுக்கும், நீருக்கும், முகிலுக்கும் உவமையாகக் கூறி ஆழ்வார்கள் பரவசமடைகின்றனர்.

மற்றும் இயற்கை அன்னையின் கொடையாகிய மலர்களின் வண்ணத்தையொத்தவன் திருமால் என்பதைச் சுட்டுமுகமாக, ***'கமலத்து இலை போலும் திருமேனி' (நம். 9.7.3), 'கருவிளைப் பூவலர்' (மங். 10.5.6.) 'காயா மலர் வண்ணன்' (பெரி. 2.5.2.), 'காவிநன் மேனி' (பெரி. 2.5.2), 'குவளை மலர் நிறவண்ணன்' (மங். 9.5.1), 'திருவுருவம் ........ மலர்நீலம்' (பெரி. 4.9.1.), 'பூவைப்பூவண்ணா' (நா. திரு. 23)*** என்று திருமாலின் திருமேனியைக் கமலம், கருவிளை, காயாமலர், காவி மலர், குவளை மலர், நீலமலர், பூவைப்பூ ஆகிய மலர்களோடு ஒப்பிட்டுப் பாடுகின்றனர் ஆழ்வார்கள்.

மேற்படி திருமாலின் திருவுருவத்தைக் கடலுக்கும், பலவண்ண மலர்களைக் கூறுமிடத்துக் கரிய நிறத்திற்கும் ஒப்பிட்டுப் பாடியிருப்பது இறைவனது தன்மையைத் திறம்படப் புலப்படுத்துகின்றது. இறைவன் தன்மையானவன் என்பதனை அவனது கார்மேனியே காட்டுகின்றது. கருமை நிறம் குளிர்ச்சித் தன்மையைச் சுட்டுகின்றது, நீரையொத்தது. நீர், விழும் இடத்திற்கேற்ப அத்தன்மையதாக மாறி விடுவது போல இறைவனும் ஒவ்வொரு உயிரின் தன்மைக்கேற்ப மாறி அருள் பாலித்துக் காத்து வருகிறான்; நீருக்கு நிறமில்லாதது போல இறைவனுக்கும் வேண்டியவர் – வேண்டாதவர், உயர்ந்தவர் – தாழ்ந்தவர் எனும் பேதம் கிடையாது. இத்தத்துவத்தைப் பறைசாற்றும் பாணியிலே ஆழ்வார்கள் திருமாலின் திருவுருவத்தைப் போற்றிப் பாடியுள்ளனர்.

தொடர்ந்து, திருமாலின் திருவுருவத்தை, தீ, மலை, வான் ஆகியவற்றுக்கு உவமித்துப்

பாடிய நிலையில், *'அனலுருவில் ...... '* (மங். திருநெ. 1), *'பச்சை மாமலை போல் மேனி'* (தொண். திரு. 2), *'மரகதக் குன்றம் ஒக்கும்'* (நம். 2.5.4.) எனக் கூறி, திருமால் பஞ்ச பூதங்களான தீ, வான் மற்றும் மலை ஆகியவற்றின் சொரூபநிலை என்றுரைப்பதாக உள்ளது.

மற்றும் இறைவனது பல நிறங்கள் குறித்துப் பாட புகுந்த ஆழ்வார்கள், *'அஞ்சன வண்ணன்'* (பெரி. 1.3.10), *'கருமேனியம்மான்'* (குல. 1.11), *'நீலச் சுடர்விடுமேனி'* (நம். திரு. 14), *'பச்சைப் பசுந்தேவர்'* (நா. 11.4), *'மஞ்சளும் மேனியம்'* (பெரி. 3.4.3), *'தூமணிவண்ணனே'* (பெரி. 1.3.5), *'மால் வண்ணனே'* (திருமழி. நான். 83) எனப் பாடி, இறைவன் இயற்கையின் சொரூபம் எனும் தத்துவத்தைப் புலப்படுத்துகின்றனர்.

## உடல் உறுப்பு, ஆடை அணிகலன்கள்

அலங்காரப் பிரியனான திருமாலின் உடல் உறுப்பு, ஆடை அணிகலன்கள் குறித்து ஆழ்வார்கள் போற்றிப் பாடும் பாங்கு சிறப்புறுகின்றது. திருமாலின் திருமுகத்தைக் கண்டு உள்ளம் பரிதவித்த ஆழ்வார்கள், *'செங்கமல முகம்'* (பெரி. 2.2.9), *'கதிர்மதியம் போல் முகத்தான்'* (நா. திரு. 1), *'ஒளிமதி சேர்திருமுகமும்'* (குர. 1.6) என்று கூறி, *'சார்ங்கமதுவே போல் புருவ வட்டம்'* (நா. 1.6); *'கோலநீள் கொடி மூக்கும்'* (நம் 5.5.6) என திருமாலின் புருவம், மூக்கு ஆகியவற்றின் அமைப்பைப் பாடுகின்றனர்.

மேற்படி வர்ணனை நிகழ்த்தும் ஆழ்வார்கள் தொடர்ந்து, *'தாமரைக் கண்ணன்'* (பெரி. 1.3.3), *'பங்கயக் கண்ணன்'* (நம். 3.4.2.), *'மலர்க் கண்ணன்'*(குல. 2.8), *'திருநெம் நடுங்கண்'* (திரு. 74), *'ஆழியற்கண்ணா'* (நம் 10.3.6) என்று திருமாலின் கண்ணையும்; *'கனிவாய்'* (பெரி. 1.5.9), *'பவள வாய்'* (பெரி. 1.6.1), *'செஞ்சிறுவாய்'* (குல. 7.5), *'சோதிச் செவ்வாய்'* (நம். 8.5.1) என்று திருமாலின் வாயினையும் வர்ணித்து, கூடவே, *'வண்டார் குழல்'* (பெரி. 2.5.10), *'நீலப் பனியிருங் குழல்கள்'* (நம். 9.9.3), *'மட்டார் பூங்குழல்'* (மங். 10.10.4) என்று குழலையும் வர்ணித்துத் தாம் திருமால் மீது கொண்டுள்ள பக்திப் பெருக்கைப் புலப்படுத்துகின்றனர்.

இதே பாணியில், திருமாலின் மார்பு, தோள், கை, உந்தி, கால் ஆகியன குறித்துச் சுட்டுமிடம், *'எழில்திரு மார்ளவர்க்கு'* (பெரி. 1.33.5), *'திருநன் மார்பும்'* (தொண். திரு. 20), *'வரைபுரை திருமார்பில்'* (மங். 8.5.2) என்று மார்பின் அமைப்பையும்; *'சுந்தரத் தோளனே'* (பெரி. 1.3.6), *'தடந்தோள்'* (நா. 14.8), *'விறல்வரைத் தோள்'* (மங்.8.3.1), *'மல்திண்தோள்'* (நம். 10.4.11) எனத் தோளின் வனப்பையும்; *'தடக்கையன்'* (பெரி. 1.4.6.), *'பொற்கையன்'* (நா. 11.5), *'வண்ணச் செஞ் சிறுகை'* (குல 76), *'செய்யகை'* (நம். 6.1.7) என்று கையின் தன்மையையும்; *'நளிர்மா மலருந்தி'* (நா. 14.9), *'தடமலர் உந்தி'* என்று

உந்தியின் தோற்றத்தையும் கூறி, இறுதியாக கால்களின் அமைப்பைச் சுட்டுமிடம், *‘பாதகமலங்கள்’* (பெரி. 1.2.1), *‘பொன்னடி’* (நா. 5.5), *‘கழலிணைகள்’* (குல 4.4), *‘இணையடியே’* (மங். 1.4.1) என்று இன்னும் பலவாறு திருவடிச் சிறப்பினையும் வர்ணித்துப் பாடும் பாங்கு சிறப்புறுகின்றது.

## ஆடை அணிகலன்கள்

அலங்காரப் பிரியனின் திருக்கோலச் சிறப்பைப் போற்றிப் பாட முனைந்த ஆழ்வார்கள், திருமால் புனையும் ஆடை அணிகலன் குறித்துப் பலவாகப் பாடி உவகைக் கொள்கின்றனர்.

திருமால் பூண்ட ஆடை அணிகலன்கள் குறித்துப் பாட விழைந்த ஆழ்வார்கள், *‘சோதிச் சுடர் முடியாய்’* (பெரி. 1.3.6), *‘உயர் மணிமகுடம் சூடி நின்றானை’* (மங். 4.3.4), *‘மயில் தழைப் பீலிசூடி’* (குல. 6.9), *‘மின்னு மணிமகர குண்டலங்கள்’* (மங். பெரிய), *‘மங்கல ஐம்படையும்’* (பெரி. 1.5.10), *‘பூம் ஆரம் பூண்டான்’* (பொய். முதல் 72), *‘வெண்புரி நூலானை’* (நம். திரு. 79), *‘பொன்னாணும்’* (பேய்மூன் 63), *‘பொன்முகக் கிண்கிணி யார்ப்ப’* (பெரி. 1.4.1) என இவ்வாறு திருமால் தன் திருமுடியில் மயிற்பீலி சூடி, நெற்றியில் சுட்டியும், காதில் குண்டலமும், கழுத்தில் ஐம்படைத் தாலியும், மணிமார்பில் வனமாலையும் முப்புரிநூலும், தோளில் ஒளி பொருந்திய ஆடகமும், திருவயிற்றில் உதரபந்தமும், இடையில் பவளமும், பொற்பாதத்தில் கிண்கிணியும் சூடி எழில் ஓவியம் படைக்கும் திருக்கோலத்தில் ஊண் உருகி, உயிர் உருகி, பக்திப் பெருக்கில் திளைக்கின்றனர்.

## படைக்கலன்கள்

திருமாலின் அளப்பறிய ஆற்றலைக் குறிக்கும் அடையாளங்களான படைக்கலன்கள் குறித்தும் ஆழ்வார்கள் சுட்டத் தவறிவிடவில்லை. திருமாலிற்குரிய துளசி மாலையையும், சங்கு, சக்கரம், சாரங்கம் எனும் வில், கதை, வாள் என்னும் ஐவகைப் படைக்கலன்களும் ஆழ்வார்கள் பாடல்களில் சுட்டப் பெறுகின்றன. இவ் ஐவகை ஆயுதங்களுடன் மேலும் மூவகைப் படைக்கலன்களும் சேர்த்து எண்வகைப் படைக்கலன்களையும் எட்டுக் கைகளிலும் ஏந்தி அட்டப் புயகரம் என்னும் தலத்தில் திருமால் கோவில் கொண்டுள்ள திறனை, *‘தொட்ட படை எட்டும்’* (III. 99) என வரும் பேயாழ்வார் பாடல் புலப்படுத்துகின்றது. பெரிய திருமொழியிலும்,

*“செம்பொ னிலங்கு வலங்கைவாளி*
*திண்சிலை தண்டொடு சங்கமொள்வாள்*

*உம்ப ரிருசுட ராழியோடு யெற்றே*
*கேடக மொமலர் பற்றியெற்றே"* (பெ. தி. மொ. 2.8.3)

என்று திருமங்கையாழ்வார், வாளி, சிலை, தண்டு, சங்கு, வாள், சக்கரம், கேடகம், மலர் ஆகிய எண்வகை படைக்கலன்களையும் சுட்டி, திருமால் அவற்றை ஏந்தி அருள் புரிவதாகப் பாடி இன்பக் கடலில் மூழ்குகின்றார்.

**கிடந்த கோலம்**

திருமாலின் கிடந்த கோலம் குறித்தும் ஆழ்வார்கள் வர்ணித்துப் பாடியிருக்கும் பாங்கு அவர்களது பக்தித் திறத்தைப் பறைசாற்றுகின்றது. திருமால் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற பிரபஞ்சத் தொழில்களைப் புரிகிறார்; சங்கற்ப மாத்திரையாலே உலகையும், உலகிலுள்ள பொருள்கள் அனைத்தையும் படைக்கிறார். திசைகளோடு பொருந்திய உலகுகளும் திசைத் தெய்வங்களும் அவற்றுக்கு வழங்கப்பட்ட தொழில்கள் அனைத்தும், கடல் வண்ணனான திருமால் படைத்த அறிவை மயக்கும் பொருள்களாகும். உலகிற்கு மூலக்காரணம் திருமாலே. எவ்வகைப் பொருள்களிலும் கலந்து நிற்பவனும் அவனே. உயிர்களையும் உலகினையும் திருமால் தன் உடம்பாகக் கொண்டு, தான் அவற்றிற்கு உயிராக நின்று இயக்குகின்றான். இத்தத்துவத்தை உணர்த்துவதே திருமாலின் கிடந்த கோலமாகும்.

திருமால் பரமபதமாகிய வைகுண்டத்தில் பாற்கடலின் நடுவே பாம்பணையில் நித்தியசூரிகள் சூழத் திருவுறைமார்பனாய் அறிதுயில் கொண்ட கோலத்தினைப் பரத்துவம் என்பர் வைணவர். இந்நிலையே அன்பர்கள் அனைவரும் அடைதற்குரிய இறுதிக் குறிக்கோளாகும். இப்பரத்துவ நிலையினைச் சுட்டுமுகமாக, *'அறிதுயில் அலைகடல் நடுவே'* (மங். 5.7.6), *'யோகு துயில் கொண்ட'* (பெரி. 1.5.1), *'பாற்கடலுள் கண்துயிலும்'* (குல. 4.4), *'அரவணைத் துயின்றான்'* (மங். 8.3.2), *'நாகத்தின் மேல் துயில்வான்'* (பூத இரண். 96), *'பணங்கள் ஆயிரமுமுடைய பைநாகப் பள்ளியாய்'* (நம். 8.1.8), *'அழல் உமிழும் பூங்கார் அரவணை'* (திருமழி. நான் 10) என, இவ்வாறு திருமால் நச்சுத்தன்மையும், தீ உமிழும் இயல்பும் கொண்ட ஆயிரம் தலைகளுடன் படம் எடுத்துக் கொண்டு காட்சி கொடுக்கும் பாம்பின் படுக்கையில் திருப்பாற்கடல் சூழ அறிதுயில் கொள்ளும் எழில் காட்சியை ஆழ்வார்கள் வர்ணித்துப் பாடுகின்றனர்.

மேற்படி திருமாலின் கிடந்த கோலத்தைப் பாடுமுகமாக, நீரிலிருந்தே உலக உருவாக்கம் நிகழ்ந்தது; அதற்கு வித்தான திருமால் திருப்பாற்கடல் சூழ, பாம்பின் மேல் அனந்த சயனம் கொள்கிறான்; பாம்பு எவ்வளவு கடுந்தன்மை கொண்டாலும் இறைவனிடத்தில் அடங்கி விடுகின்றது. ஆக, இவ்வுலகில் இயங்கும் உயிர்கள், சக்திகள் அனைத்தும்

இறைவனின் சொரூப நிலையில் அடக்கம் எனும் சமயத் தத்துவம் புலப்படுகின்றது.

**உள்ளுறை உவமங்கள்**

திருமாலன்பர்கள் மறந்தும் புறம் தொழா மாந்தர்; திருமாலையே நோக்கி வணங்கும் ஒருமை உள்ளத்தினர். ஒருமை உணர்வுதான் இறையருளைப் பெறுவதற்கு உறுதுணையாகும். இத்தகு ஒருமைநிலை வாய்க்கப் பெற்ற ஞானிகளே சீவன் முக்தர்கள் ஆவர். இவர்கள் திருமாலையே நாடுவதும் பாடுவதும் அவன் பொன்னடியைச் சூடுவதும் தவிர உலகில் வேறு எச்செயல்கள் நிகழினும் அவற்றைக் கருத்திற் கொள்ளார்.

மேற்படி பக்தி வைராக்கியத்தைப் புலப்படுத்துமுகமாக திருமாலுக்கும் தனக்கும் உள்ள உறவை உள்ளுரை உவமங்கள் வழி சுட்டி, வர்ணித்துப் பாடியிருப்பது ஆழ்வார்களது பக்தித் திறத்திற்குச் சிகரமாக அமைந்துள்ளது. இவர்களுள் குறிப்பிடத்தக்கவர் குலசேகராழ்வார் ஆவார். அவர் பாடியருளிய **'பெருமாள் திருமொழி'**யில், "*தருதுயரம் தடாயேல்*" பகுதியில் தனக்கும் திருமாலுக்கும் இடையே உள்ள உறவு நிலையை **'தாய் - சேய்', 'மருத்துவன் - நோயாளன், 'கணவன் - மனைவி', 'கோன் - குடி', 'மரக்கலம் - பறவை', 'சூரியன் - தாமரை', 'மழைமேகம் - பயிர்கள்', 'கடல் - நதி'** ஆகிய தொடர்பு நிலைகளில் போற்றிப் பாடியிருப்பது சிறப்புக்குரியதாகும்.

**தாய் - சேய் உறவு**

தாய் – சேய் உறவு என்பது உலகப் பந்தப் பாசத்தில் அதிமுக்கியமான உறவு; தொப்புள் கொடி உறவு; இப்பிறவி முடியுமட்டும் தொடர்ந்து வரும் இரத்த சம்பந்தமான உறவு. இது பிரம்மன் உறவு; அதாவது படைத்தல் உறவாகும். எனவே, திருமாலைப் பிரம்மனாக்கி,

*அரிசினத்தாலீன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்*
*அருள்நினைந்தேயழுங்குழவி அதுவேபோன்றிருந்தேனே*

என இவ்வுறவைக் காட்டி, உலகம் நிலைத்து நிற்கு மட்டும் நிலையான, நித்தியமான, மாறாத உறவாக இது விளங்கும் எனப் பாடி பரவசமடைகின்றார்.

**மருத்துவன் - நோயாளன் உறவு**

மண்ணுலகில் மருத்துவனே உயிர்களைக் காக்கும் கடவுள்; காக்கும் கடவுளே திருமால்; திருமாலே மருத்துவன். ஆக, மண்ணுலக மருத்துவனாக திருமாலும் பிறவித் துன்பத்தால் அல்லலுறும் நோயாளனாக குலசேகராழ்வாரும் – ஆதிமூலமும் வியாதி

மூலமும் – பேசிக் கொள்ளும் பாங்கு சிறப்புறுகின்றது. இதனையே,

*"வாளாலறுத்துச் சுடினும் மருத்துவன்பால்*
*மாளாதகாதல் நோயாளன் போல் ......"* (குல. 5.4)

என்று பக்திப் பெருக்கெடுக்கப் பாடுகின்றார்.

மேற்படி உவமையை உற்று நோக்கின், 'இறைவன்' என்ற மருத்துவன் 'வைத்தியலிங்கமாக' ஆன்மாவின் 'வினைப்பயன்' என்ற நோயினை நீக்கும் வண்ணம் 'இறைச்சோதனை' எனும் அறுவை சிகிச்சையான வாளினாலும் தீயினாலும் வெட்டி, சுட்டு,. துன்புறுத்தி மனித உயிரைப் பற்றியிருக்கும் மாசுகளைப் போக்கி, 'மோட்சம் 'எனும் விடிவினைத் தரும் பக்தி மார்க்கச் சிந்தனை புலப்படுகின்றது.

**கணவன் . மனைவி உறவு**

*வினையே ஆடவர்க் குயிரே*
*மனையுறை மகளிர்க் காடவ ருயிரே*

எனும் சங்க இலக்கியக் கூற்றுக்கிணங்க ஒரு பெண்ணுக்குப் பெற்றோரையடுத்து, சகலமும் கணவனாகிறான். அவனே, அவள் விடும் சுவாசக்காற்று; அவள் உடலைத் தழுவி நிற்கும் உயிர்; அவ்வுயிரே இறைவன். இதனையே,

*கண்டாரிகழ்வனவே காதலன்றான்செய்திடினும்*
*கொண்டானையல்லால் அறியாக்குலமகள்போல் ......* (குல. 5.3)

என்று குலசேகராழ்வார், கணவன் ஸ்தானத்தில் எம்பெருமானையும் மனைவி ஸ்தானத்தில் தன்னையும் வைத்துப் பாடி, திருமால் மீது தாம் கொண்ட கரவாத அன்பையும், நித்தியப் பக்தியையும் எடுத்தியம்புகின்றார்.

**கோன் . குடி உறவு**

குடிகளின் காவல் தெய்வம் அரசனாகிறான். ஆக, அரசனே இறைவனின் பிரதிநிதியாகிறான். எனவே, என்னதான் அரசன் செங்கோல் துறந்து கொடுங்கோல் ஆட்சிப் புரிந்திடினும் குடிகள் அவனது தயவையே நாடி வாழ்வர். அது போல் தானும் இறைவனின் சோதனையையும் பொருட்படுத்தாது அவனது அருளையே வேண்டி நிற்பதாக,

*..... தான் நோக்காதெத்துயரஞ் செய்திடினும் தார்வேந்தன்*
*கோல்நோக்கிவாழுங் குடிபோன்றிருந்தேனே.* (குல. 5.3)

என்று பாடி, பரமாத்மா காப்பவனாகவும், ஜீவாத்மா காக்கப்படுபவனாகவும் விளங்கும் நியதியைப் பறைசாற்றுகின்றார். இதனையே,

*வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்*
*கோல்நோக்கி வாழும் குடி.*

என்ற வள்ளுவன் வாக்கும் சுட்டுவது ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

**மரக்கலம் - பறவை உறவு**

கடலின் நடுவிலே செல்லும் ஒரு மரக்கலத்தினுடைய பாய்மரத்து உச்சியிலே தங்கிய பறவை, அதனை விட்டு வேறொரு போக்கிடம் தேடி தனது தேகவலியைக் கொண்டு நாலாபக்கமும் பறந்து சென்று பார்த்திடினும் எங்கும் கரையைக் காணாது மீண்டும் அம்மரக்கலத்தின் பாய்மரத்து உச்சியிலே வந்து சேரும். அதுபோல உன்னை விட்டுச் சென்றாலும் வேறு சரணமில்லாமையாலே மீண்டும் உன்னையே அடைவதற்கு உரியேன் நான் எனும் கருத்துப் புலப்படுமுகமாக இறைவனை மரக்கலமாகவும் தன்னைப் பறவையாகவும் உவமித்துப் பாடுகின்றார் குலசேகராழ்வார்.

கப்பல் பறவைக்கு ஆதாரமாக இருப்பது போல இறைவன் தனக்கு ஆதாரமாக இருக்கிறான்; கடலில் பறந்து செல்லும் பறவை இறுதியில் கரை காணாது தான் முன்பிருந்த கலத்தை வந்தடைவது போல அடியவர்களின் துன்பங்கள் யாவும் திருமால் ஒருவனாலே தீர்க்கப்படக்கூடியவை. எனவே, அடியார்கள் திருமாலை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு அவன் ஒருவனையே வணங்குகின்றனர் என்ற பக்தி வைராக்கியம் இங்குப் புலப்படுகின்றது.

**சூரியன் - தாமரை உறவு**

சூரியனே உலக இயக்கத்திற்கு அடிப்படை; சூரிய உதயமே உலக உயிர்களின் இயக்கத்திற்கு வழி வகுக்கின்றது; உயிர்களையும் காக்கின்றது. எனவே, இறைவனுக்கு உகந்த உவமானமாகச் சூரியனையும் சூரியன் வருகைக் கண்டு அலரும் தாமரையாகத் தன்னையும் உவமித்துப் பாடுகின்றார் குலசேகராழ்வார். ஆக, சூரியனுக்கு மட்டுமே தாமரை மயங்குவது போல தானும் திருமாலின் அருட்பார்வைக்கு மட்டுமே உருகி தவமிருப்பேன் என நாயகன் – நாயகி பாவனையில் திருமலைப் போற்றிப் பாடியிருக்கும் பாங்கு சிறப்புறுகிறது. இது போலவே ஆண்டாள் தன் நாச்சியார் திருமொழியில் திருமாலைத் தலைவனாகவும், தன்னைத் தலைவியாகவும் பாவனை செய்து பாடியிருப்பது இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

**மழைமேகம் - பயிர்கள் உறவு**

மேகம் திரளாமல் வானம் பொய்த்து விட்டால் பயிர்கள் வாடி இறந்து விடும்; மண்ணுலக ஜீவராசிகளும் உலக இயக்கமும் செயலிழந்து விடும். ஆகவே, மேகம் மழை பொழியாது வஞ்சித்தாலும் பயிர்கள் அதனையே எதிர்பார்த்துப் பிறவற்றை நோக்காது இருக்கும். அது போல 'நானும் உனது திருவடியை இணைந்தே இருப்பேன்' என்ற மனத்திண்மையில் தன்னைப் பயிருக்கும் இறைவனை மழை மேகத்திற்கும் உவமைப்படுத்தி இறைவன்பால் கொண்ட நித்திய அன்பைப் போற்றிப் புலப்படுத்துகிறார் குலசேகரப்பெருமான்.

இவ்வாறு அமைந்துள்ள உவமையில் மேகமும் திருமாலும் கருணை வடிவங்களாகக் காட்டப்படுகின்றனர். சுயமாக நீரைத் தேடிச் செல்ல முடியாத நிலையில் பயிர்கள் மழைக்காக மேகத்தை மட்டுமே நம்ப முடியும். மேகத்தின் கருணையினால் கிடைக்கப் பெறும் மழையைப் பெற்றே செழித்து வளர முடியும். அது போல துன்பத்தில் வாடும் உயிர்கள் திருமாலை மட்டுமே நம்ப முடியும். அவனது கருணையினால் மட்டுமே துன்பம் தீரும். அவனருளாத போது உயிர்கள் வேறு வழியில்லாது தவிக்கும் எனும் கருத்து உவமை வழி சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது. இதன் பொருட்டே,

*அவனருளாலே அவன்தாள் வணங்கி ......* **(*சிவபுராணம்*)**

என மணிவாசகர் சிவபெருமானைத் துதிப் பாடிய பாங்கும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

**கடல் - நதி உறவு**

பல நதிகள் பலவிடம் நோக்கி ஓடினாலும் இறுதியில் அவை கடலில்தான் சங்கமிக்கின்றன. அவை சங்கமிக்கும் இடம் கடல்தான் என்பது உறுதியான பின்பு அவை வேறு இடம் நோக்க முடியாது. அது போல உயிர்களும் இறைவன் மீது பக்தி பூண்டு வாழ்ந்து இறுதியில் அவனிடமே சரணடைய வேண்டும் என்ற கருத்துப் புலப்படும் வண்ணமே குலசேகரப் பெருமான் மேற்படி உவமை வழி தன்னை நதியாகவும் எம்பெருமானைக் கடலாகவும் கொண்டுப் பாடி பரவசமடைகின்றார். இவ்வாறு உவமைகளைக் கையாண்டு ஆழ்வார்கள் திருமால்பால் கொண்ட மாறாத காதல் பெருக்கத்தைப் புலப்படுத்தியிருப்பது கற்றுணரத்தக்கது.

**முடிவுரை**

ஆழ்வார்கள் திருமாலை வர்ணித்துப் பாடிய பாங்கை நோக்குங்கால்,

*சொல்லுகச் சொல்லை பிறிதொருச்சொல் அச்சொல்லை*
*வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து*

எனும் வாள்ளுவர் வாய்மொழிக்கிணங்க, அவர்கள் திருமால்பால் கொண்ட ஆழ்ந்த பக்திப் பெருக்கிற்கு அவர்களது பக்திப் பாடல்களே அளவுகோலாக அமைந்துள்ளன. இவ்வகையில் ஆழ்வார்கள் திருமாலின் அலங்காரக் கோலத்தையும், கிடந்த கோலத்தையும், அவதாரச் சிறப்பையும் உள்ளுரை உவமங்கள் இயைந்து வர வா்ணித்துப் பாடியிருக்கும் திறன் பக்தி உலகிற்கே மணிமகுடம் சூட்டியுள்ளது என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

## துணைநூல் பட்டியல்


ஆதித்தா், அ. கு. 1983 **கம்பா் கவி வளம்,** வானதி பதிப்பகம்

இராகவையங்காா், மு. 1981, **ஆழ்வார்கள் காலநிலை,** மணிவாசகா் நூலகம், சிதம்பரம்.

இராசமாணிக்கம், தி. 1988, **திவ்ய பிரபந்த ஒளிநெறி**, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட், சென்னை

கந்தசாமி, ந. 1994, **தமிழ்ப் பக்தி இலக்கியம்,** திருமகள் வெளியீடு, கோலாலம்பூர்

கந்தசாமி, ந. 1994 **சங்க இலக்கியத்தில் பக்தி,** திருமகள் வெளியீடு, கோலாலம்பூர்

**கலைக்களஞ்சியம் - தொகுதி 1,** 1954. தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை

குலசேகரன் ஸ், 1988. **வைணவத்தில் ஆழ்வார்கள் காலநிலை,** திருமகள் வெளியீடு, சென்னை

குலசேகராழ்வாா், 1930. **பெருமாள் திருமொழி,** மதறாஸ் மாடல் அச்சகம்.

ஞானசுந்தரம், தெ. 1984, **பெரிய திருமொழி உரையும் தமிழாக்கமும்,** தமிழ்ப் பல்கலைக்கழகம், மாருதி பிரஸ், தஞ்சாவூர்

நம்மாழ்வாா், 1953. **திருவாய்மொழி,** பார்வர்ட் பிரிண்டர்ஸ், கும்பகோணம்

நாச்சியாா், 1956. **நாச்சியார் திருமொழி,** ஸ்ரீ வேங்கடேச்வரா பிரஸ், காஞ்சீபுரம்.